# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.61/2022**
**Prosecution Witness – PW.6**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சிவசங்கரி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(Accused absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

முதல் விசாரணை–

நான் தற்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2015 ம் தேதி நான் இரணியல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 14.00 மணிக்கு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் இருந்து போன் மூலம் கிடைக்கப்பட்ட தகவலை பெற்று ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த மதுரை CITU காலணியை சேர்ந்த சுப்பையா என்பவரை சுப்பையா பிள்ளை மகன் ராமராஜ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று இரணியல் காவல் நிலைய காவல் நிலையம் வந்து 19.00 மணிக்கு இரணியல் காவல் நிலைய குற்ற எண் 711/2015 பிரிவுகள் 341, 294(B), 323, 307 மற்றும் 506(ii) இ.தா.சா படி வழக்கு பதிவு செய்து. முதல் தகவல் அறிக்கையை இரணியல் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை உடன் புகார் மனுவையும் சேர்த்துதான் அனுப்பினேன். வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்காக குளச்சல் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் பொறுப்பு இரணியல் காவல் நிலையம் இருந்ததால் அவரிடம் ஒப்படைத்தேன். அது தொடர்பாக குளச்சல் காவல் நிலைய

ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை தான் நான் பதிவு செய்தது அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் வாக்கு மூலம் நான் பெற்றது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

வழக்கு தொடர்பாக புகார் தாரரிடம் இருந்து எழுத்து மூலமாக புகார் எதுவும் பெறவில்லை என்றாலும், வாக்குமூலம் தான் பெற்றேன் என்றாலும், ஆமாம். நான் பெற்ற புகார் வாக்குமூலத்தில் சம்பவம் 8.00 மணி முதல் 9.00 மணிக்குள் நடைபெற்றதாக சொல்லவில்லை என்றால், ஆமாம். புகார் வாக்குமூலத்தில் சம்பவ தினத்தன்று அவருடைய வயலுக்கு தென்னை மரம் நடுவதற்கு சென்றதாக சொல்லவில்லை என்றால், ஆமாம். புகார் வாக்கு மூலத்தில் சம்பவம் நடந்த பிறகு அவருடைய கைபேசி மூலமாக காவல் நிலையத்தை தொடர்பு கொண்டதாக சொல்லவில்லை என்றால், ஆமாம். புகார் வாக்குமூலத்தில் தகவல் தெரிவித்த உடன் சம்பவ இடத்திற்கு இரண்டு காவலர்கள் வந்தார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால், ஆமாம். புகார் வாக்குமூலத்தில் எங்கள் காவல் நிலையத்தை சேர்ந்த சுவாமிதாஸ் என்ற காவலர் எதிரிக்கும் புகார்களுக்கும் இடையே நடந்த பிரச்சனையை சம்பவ இடத்திற்கு சென்று தீர்த்துவிட்டதாக சொல்லப்படவில்லை என்றால், ஆமாம். புகார் வாக்குமூலத்தில் ஆட்டோவில் சென்ற புகார்தாரரை எதிரி தன்னுடைய காரில் வந்து புகார்தாரரை மறித்து தாக்கியதாக சொல்லப்படவில்லை என்றால், ஆமாம். சம்பவம் தேதி அன்று வழக்கின் எதிரி புகார்தாரரை தாக்கியதாக புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும்.

இரண்டு தரப்பினர்களுக்கு இடையே நடந்த பிரச்சனையை வைத்துக்கொண்டு ஒரு தரப்பினருக்கு ஆதரவாக மட்டும் புகார் வாக்குமூலம் பெற்று அவர்களுக்கு ஆதரவாக வழக்கு பதிவு செய்தேன் என்றால், சரியல்ல. நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக வாக்குமூலம் கேட்டு வழக்கு பதிவு செய்தேன் என்றாலும், சரியல்ல.எதிரிக்கும் இந்த வழக்குக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**